1994 நவம்பர் 10]

இரண்டாவது கட்டமாக 85.73 இலட்சமும் தந்த பிறகுதான் தரமான நூல் இப்பொழுது வந்து கொண்டிருக்கிறது. ஓரளவுக்கு தரமான நூல் வந்துகொண்டிருக்கிறது. படிப்படியாகத்தான் வளர்க்க முடியுமே தவிர, ஒரே ஆலைக்கு இத்தனை கோடி ரூபாய் தரவேண்டுமென்றால், அருள்கூர்ந்து என்.டி.சி. மில்ஸுக்கு தருவதுபோல் மத்திய அரசில் வாதாடி, போராடி--அவர்களுக்கு மாடர்னைசேஷனுக்கு ஆயிரம், இரண்டாயிரம் கோடி தருகிறார்கள் அல்லவா, என்.டி.சி. மில்லுக்கு, சிட்டா நூல் தயாரிக்காத நூற்பாலைகளுக்கு எல்லாம் பல கோடி ரூபாய் தருகிறார்கள்—அதுபோன்று தயவுசெய்து இங்கே வாதாடுகின்ற வாதங்களை, நீங்கள் உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்து அங்கே வாதாடினால் உகந்ததாக இருக்கும் என்பதைத் தங்களுக்குத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* புரட்சித் தலைவி ஆட்சிப் பீடத்திற்கு வந்த பிறகுதான் மாடர்னைசேஷனுக்கு இது தரப்பட்டது. கர்மவீரர் காமராஜர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே காமராஜர் தியாகத்தை நாங்கள் மதிக்கிறோம். ஆனால், அதற்குப் பின்னாலே அந்தப் பொறுப்பிலே வந்தவர்கள் மாடர்னைசேஷனுக்கு ஆண்டுக்காண்டு வின்ச் மாற்றுவது, கேம்ஸ் மாற்றுவது, போன்றவைகளுக்கு பணம் தரவில்லை. புரட்சித் தலைவி வருகிறவரையிலும் அதைக் காத்து வைத்திருந்தார்கள். புரட்சித் தலைவி வந்த பிறகுதான் படிப்படியாக அனைத்தும் நன்கு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 87, திரு. க. குப்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

87—

மாதவரம் நகரியத்தில் தணிகாசலம் நகரில் நீர் தேங்குவதைத் தடுத்தல்.

9753—திரு. க. குப்பன்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் நகரியத்தில் தணிகாசலம் நகர் மற்றும் சுற்றியுள்ள பகுதியில் நீர் தேங்குவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

[1994 நவம்பர் 10

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மாதவரம் நகரியத்தில் தணிகாசலம் நகர் மற்றும் சுற்றியுள்ள பகுதியில் நீர் தேங்குவதைத் தடுப்பது குறித்து ஒரு விரிவான ஆய்வு, பொதுப்பணித் துறை, திட்டம் மற்றும் வடிவமைப்பு தலைமைப் பொறியாளரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. க. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட, மாதவரம் நகரியத்திற்குட்பட்ட பகுதியில் தணிகாசலம் நகர், அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மழை, வெள்ளக் காலங்களில் மழை நீர் தேங்கி அங்கே உள்ள மக்கள் வெளியே வர முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. ஆண்டுதோறும் நாங்கள் அங்கே அரசினுடைய உதவியோடு படகுகளை வைத்து அவர்களுக்கு நிவாரணம் வழங்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதைக் கவனத்திற் கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றவுடன் இந்தத் திட்டத்திற்காக பொதுப்பணித் துறை மூலமாக 10 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, அரசாணை இன்றைக்கு மாதவரம் நகரியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்தப் பணியை மிக விரைவிலே தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதவரம் நகரியத்தில் தணிகாசலம் நகர் பகுதியில் நீர் தேங்குவதைத் தவிர்ப்பதற்கு 29-9-1993-ஆம் நாளிட்ட பொதுப்பணித் துறை அரசாணை எண் 1405-ன்கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. விரிவான ஆய்வு செய்து அடிப்படை அறிக்கை ஒன்றை திட்ட மதிப்பீடுகளுடன் அனுப்ப வேண்டுமென்று பொதுப் பணித் துறை (பாசனம்) தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்துள்ளார்கள். நிதி இன்னமும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. விரிவான அறிக்கை தயாரித்து அதற்கு அட்மினிஸ்டிரேட்டிவ் அப்ரூவல் பெற்றவுடனேதான் நிதியாதாரங்களை ஒதுக்க முடியும். இதை எந்தத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளலாம் என்பதற்கான ஆய்வு அரசின் தரப்பிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உலக வங்கியினுடைய நிதித் திட்டத்திலே எடுத்துக்கொள்ளலாமா அல்லது வேறு ஏதாவது திட்டத்திலே எடுத்துக்கொள்ளலாமா என்ற

1994 நவம்பர் 10]

அடிப்படையிலே இன்னும் அரசு முடிவு எடுக்கவில்லை. ஆகவே, ஒரு விரிவான அறிக்கை *10* கோடியே *35* இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு பாசனம் பொறியாளரிடத்திலே இருக்கின்றது. அரசுக்கு வருகின்றபோது ஆய்வு செய்யப்பட்டு எந்த நிதியின் அடிப்படையிலே செய்யலாம் என்பதைப்பற்றி அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய கருத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். *10* கோடியே *35* இலட்சம் ரூபாய் செலவில் இந்தப் பணியை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது எவ்வளவு விரைவில் ஆராய்ந்து முடிக்கப்படும், எப்பொழுது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10–25*

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். இன்வெஸ்டிகேஷன் ஸ்டேஜிலேதான் அது இருக்கிறது. அதாவது ஆய்வு நிலையிலே இருக்கிறது. நம்முடைய நிதியாதாரங்கள் இதற்கு இடம் தருவதாக இல்லை. ஆகவேதான் 'எக்ஸ்டர்னல் எய்ட்' என்ற முறையில் வெளி உதவியின் மூலம் இதைச் செய்யலாமா என்று அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. ஆக, விரைவில் அது சம்பந்தமான முடிவை அரசு எடுக்கும் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *88*, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

88—

போளூரில் இருவழிச் சாலை அமைத்தல்

***22432 திரு. தா. வேடியப்பன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் பேருந்து நிலையம் அருகில் அடிக்கடி விபத்து ஏற்படுவதைத் தடுக்க இரயில்வே கேட் முதல் தீயணைப்பு நிலையம் வரையுள்ள சாலை, இருவழிச் சாலையாக மாற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும்?